
# தூதன்

தூதன் 35 ஏப்ரல் 2026 தூது 4

அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்;
கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்; மத்தேயு 28:6




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை - தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| ஆயரம்மா மடல் | 04 |
| ஃபுஜைரா போதகர் மடல் | 06 |
| ஆயரம்மா மடல் - ஃபுஜைரா | 10 |
| இராஸ் அல் கைமா - போதகர் மடல் | 13 |
| ஆயரம்மா மடல் - இராஸ் அல் கைமா | 16 |
| செயலர் மடல் | 18 |
| நீங்கள் கிறிஸ்தவரா! | 20 |
| திருச்சபை ஜெபநாள் | 21 |
| வேதவினா போட்டி | 24 |
| தெரிந்துகொள்வோம் | 27 |
| Health Tips | 29 |
| தமிழ் வேதவகுப்பு - சிறுவர் பகுதி | 32 |
| Children’s Corner | 34 |
| Birthday Celebrants | 38 |
| Wedding Anniversary | 42 |
| ஆராதனைப் பாடல்கள் | 43 |
| DOEG | 44 |



P.O.Box: 8785, Dubai. Mob: 050-5533645
Email: office@csitamilparishdubai.com - Website: www.csitamilparishdubai.com

# சபை போதகர் மடல்

அன்பானவர்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் திருச்சபை மக்கள் யாவருக்கும் எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த மாதம் முழுவதும் நம்மைப் பாதுகாத்து வழிநடத்தி வந்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். யுத்தங்களும், ஆபத்துகளும் நம்மைச் சூழ்ந்திருந்தாலும் ஆண்டவர் நம்மை அனைத்து சூழ்நிலைகளிலும் பாதுகாத்து நடத்துகிறார். ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். ஆண்டவர் தாமே நம்மோடிருந்து யுத்தங்களுக்கு முடிவு தந்து, இப்புதிய மாதத்திலும் நம்மைப் பாதுகாத்து நம் திருச்சபையின் ஊழியங்களையும், நம் குடும்பங்களையும் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக.

∴புஜைரா, மற்றும் இராஸ் அல் கைமா சபைகளின் ஆயர்கள், நமது சபை நிர்வாகஸ்தர்கள், EC அங்கத்தினர்கள் மற்றும் அனைத்து ஊழிய பொருப்பாளர்களையும் அன்புடன் வாழ்த்துகிறேன். கடந்த மாதத்தில் Women's Retreat, மற்றும் VBS ஊழியங்கள் நடைபெற முடியாத சூழ்நிலை காணப்பட்டது. இம்மாத்தில் Women's Retreat மற்றும் மே மாதத்தில் VBS ஊழியங்கள் தடையில்லாமல் நடைபெற ஆண்டவர் கிருபை செய்வாராக. மேலும், லெந்து கால சிறப்பு ஆராதனைகள், கன்வென்ஷன் கூட்டங்கள் மற்றும் ஈஸ்டர் பண்டிகை ஆராதனைகளை ஆண்டவர் ஆசீர்வாதமாக அமைத்து தருவாராக. இந்நாட்களில் நாம் அதிகமாக ஆண்டவரோடு நெருங்கி வரவும், நமது ஆவிக்குறிய வாழ்வை புதுப்பித்துக்கொள்ளவும் அர்ப்பணிப்போமாக. யுத்த நிறுத்தத்திற்காகவும், யுத்த பாதிப்புகளிலிருந்து தேசங்கள் மீண்டு வரவும் ஜெபிப்போம். கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். இம்மாத வாக்குத்தத்த வசனத்தை தியானிப்போம்...

**எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும். சங்கீதம் 121:1,2**

I lift up my eyes to the mountains where does my help come from? My help comes from the LORD, the Maker of heaven and earth. Psalm 121:1-2

சிறுவன் ஒருவன் தன் தந்தையுடன் குறுகிய பாலம் ஒன்றின் வழியாக நடந்து சென்று கொண்டிருந்தான். அப்பொழுது, “என் கையை இறுகப் பிடித்துக்கொள்” என்று தந்தை மகனிடம் சொன்னார். ஆனால், சிறுவனோ “இல்லை அப்பா, நீங்கள் என் கையைப் பிடித்துக்கொள்ளுங்கள்” என்று சொன்னான். தந்தைக்கு ஆச்சரியம்: இரண்டிற்கும் என்ன வித்தியாசம்? என்று கேட்டார். சிறுவனோ “நான் உங்கள் கையைப் பிடித்தால், ஒருவேளை விட்டுவிடுவேன்: ஆனால், நீங்கள் என் கையைப் பிடித்துக்கொண்டால் ஒருபோதும் விடமாட்டீர்கள்” என்று நம்பிக்கையுடன் சொன்னான்.

ஆம். அன்பானவர்களே, இன்று போர், மழை வெள்ளம், பொருளாதார வீழ்ச்சி, வேலைவாய்ப்பு, பிள்ளைகளின் கல்வி, வியாதிகள் மற்றும் நமது பாதுகாப்பு குறித்து பல பிரச்சனைகள் நிறைந்த சூழ்நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த சூழ்நிலைகளில் நாம் பாதுகாப்பாகவும், சமாதானமாகவும் வாழ ஆண்டவருடைய உதவி நமக்கு அவசியம். நாம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கையுடன் தான் வாழுகிறோம். ஆனால், நாம் ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டு வாழ்வதற்கும் ஆண்டவரிடம் நம்மை முழுவதுமாக ஒப்புக்கொடுத்து வாழ்வதற்கும் வித்தியாசம் உண்டு. நாம் ஆண்டவர் மீது வைத்துள்ள நம்பிக்கை சூழ்நிலைகள் நம்மை நெருக்கும்போது குறைந்துவிட வாய்ப்பு உண்டு. ஆனால், ஆண்டவரிடம் நம்மை முழுவதும் ஒப்புக்கொடுத்து, அவர் சித்தத்திற்கு கீழ்ப்படிந்து நாம் வாழும்போது ஆண்டவர் நம்மை ஒருபோதும் கைவிட மாட்டார். அந்த ஆழமான விசுவாசத்தைக் குறித்து தியானிப்போம்.

### 1. நம்பிக்கையில் முழுமை வேண்டும். Trusting God Completely.

நீதிமொழிகள் 3: 5-6 ல், “உன் சுய புத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்: அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்” என்று வாசிக்கிறோம். முழு இருதயத்தோடு ஆண்டவரில் நம்பிக்கை கொள்வது என்பது, நமக்குத் தேவை வரும்போது மாத்திரம் ஆண்டவரைத் தேடாமல் எப்பொழுதும் ஆண்டவரையே நம்பியிருப்பது. அது மாத்திரமல்ல, நம்முடைய சுய பலத்தின் மீது நம்பிக்கை கொள்ளாமல் ஆண்டவருடைய கிருபையின் மீது நம்பிக்கை கொள்வதாகும். எனவே, வாழ்வின் சூழ்நிலைகளில் நம்முடைய திட்டங்களை ஆண்டவரிடம் ஒப்புக்கொடுத்து, அவருடைய ஆலோசனை வழிகாட்டுதலின்படி நடக்க நம்மை அர்ப்பணிக்க வேண்டும். இது ஏன் நடக்கிறது? என்ற கேள்வி நமக்குள் எழும்பும் போதும், நமக்கு விடை தெரியாத போதும் கடவுளுடைய ஞானத்தின் மீது நம்பிக்கை கொள்ளவும், நம்முடைய சில ஜெபங்களுக்கு பதில் கிடைக்காதபோது ஆண்டவரின் வேளைக்காக காத்திருக்கவும் ஆயத்தமாயிருப்பதே அவர் மீது முழு நம்பிக்கையின் அடையாளம்.

### 2. கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும். Abiding in Christ.

யோவான் 15:5 ல் "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்: என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது." என்று ஆண்டவர் இயேசு கிறிஸ்து சொல்கிறார். ஒரு திராட்சைச் கொடி தனியாக கனிகொடுக்க மாட்டாது. செடியில் நிலைத்திருத்தல் அவசியம். அதுபோல, நாமும் கிறிஸ்துவில் நிலைத்திருந்தால் மட்டுமே சூழ்நிலைகளை ஜெயிக்கமுடியும். கிறிஸ்துவை சார்ந்திருத்தல் என்பது நம்முடைய ஜெப வாழ்வின் அவசியத்தைக் குறிக்கிறது. விசுவாச உறுதியைக் குறிக்கிறது. பேதுரு அப்போஸ்தலர் கடலின் மீது நடக்கும் போது காற்று பலமாயிருக்கிறதை கண்டு பயப்படுகிறார். அந்த நேரத்தில் ஆண்டவர் இயேசு கையை நீட்டி அவரைப் பிடிக்கிறார் (மத்தேயு 15:30-31). நாமும், கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் போது உலகம் நம்மை அச்சுறுத்தும் போது ஆண்டவர் தம் கரம் நீட்டி நம்மை காப்பார்.

### 3. ஆண்டவரின் பாதுகாப்பு வேண்டும். God's Protection in Times of Need.

சங்கீதம் 121:1-2 ல் "எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்" என்று வாசிக்கிறோம். சங்கீதக்காரர் தன்னுடைய சூழ்நிலையில் ஆண்டவரிடமிருந்து எனக்கு ஒத்தாசை வரும் என்று நம்பிக்கை கொள்கிறார். எனவே, ஆபத்துக்களுக்கோ, தேவைகளுக்கோ, வியாதிகளுக்கோ பயப்பட வேண்டாம். சிங்கம், கரடி, கோலியாத்தோடு போராடின தாவீதின் அனுபவங்களை மனதில் நிறுத்திக்கொள்வோம். ஆபத்துகளுக்கு மத்தியிலும் ஆண்டவர் அற்புதமாக நடத்திச்செல்வார். தேவைகள் நெருக்கும் போது, இஸ்ரவேலர் வனாந்தரத்தில் மன்னாவினால் போஷிக்கப்பட்டதை நினைவில் கொள்வோம். கர்த்தர் நித்தமும் நம்மை போஷித்து நடத்துவார்.

ஆம். அன்பானவர்களே, எனவே சூழ்நிலைகளை நினைத்து கலங்க வேண்டாம். மரணத்தை ஜெயித்து உயிர்த்த ஆண்டவர் நம்மோடு இருக்கிறார். அவரில் முழு இருதயத்தோடு நம்பிக்கை வைப்போம். அவரில் நிலைத்திருக்க அர்ப்பணிப்போம். அனுதினமும் ஜெபிப்போம். கர்த்தர் எல்லா தீமைகளுக்கும் விலக்கி நம்மை பாதுகாத்து நன்மையாகவே நடத்துவார். ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்

Rev.K.சுதாகர்.

சபை போதகர்/தலைவர்.

# ஆயரம்மா மடல்

## இறைவனிடம் நன்மை பெற்ற இல்லத்தரசிகள் - ராகாப்

வாழ்வின் அலைகள் பலரையும் வாழ்வுப் பாதையில் பல கோணங்களுக்குத் தள்ளுகின்றன. இப்படிப்பட்ட அலைகளில் சிக்குண்டு சிலர் மீள முடியாத வலைகளுக்குள்ளும், சேறுகளுக்குள்ளும் மாட்டிக் கொள்கின்றனர். அப்படிப்பட்டவர்களுக்குக் கூட மறுவாழ்வு உண்டு என்பதே ராகாபின் வாழ்வு நமக்குக் கூறும் நற்செய்தி. ராகாப் எரிகோ மக்களைக் காப்பாற்றுவதற்காக, அவள் ஏறெடுத்த ஜெப மன்றாட்டை இப்பகுதியில் பார்ப்போம்.

### ராகாய் (அர்த்தம்) - விரிவு

ராகாபின் வீடு எரிகோவின் அலங்கத்தில் (மதில்மேல்) கட்டப்பட்டிருந்தது. ஒருவேளை அந்நியர் வந்து போகத்தக்கதான இடமாக அது இருந்திருக்கலாம். அவள் ஒரு வேசி என்று வேதம் குறிப்பிடுகிறது. ராகாப் ஒரு பாவி. எந்தச் சூழ்நிலை அவளை அப்படிப்பட்ட செயலை செய்யத் தூண்டியது என்பதை நாம் அறியோம். ஆனால் அப்படிப்பட்ட பழக்கங்கள் கானானிய மக்களிடம் சாதாரணமாக காணப்பட்டன. செழுப்பின் தெய்வமாகக் கருதி அவர்கள் வழிப்பட்டார்கள். பாகாலை ஆராதிப்பதின் ஒரு பகுதியாக விபச்சாரம் பண்ணுவதை கொண்டிருந்தனர். புனித விபச்சாரம் எனப்படும் தேவதாசி முறையும் பழக்கத்திலிருந்தது.

### 1. சத்தியத்தை அறிந்தாள் :-

ராகாப் இஸ்ரவேலரைக் குறித்தும், அவர்கள் தேவன் எகிப்திலும், இஸ்ரவேலரின் வனாந்தரப் பாதையிலும், யோர்தானுக்கு அக்கரையிலும் செய்த காரியங்களைக் குறித்தும் அவள் கேள்விப்பட்டிருந்தாள். அவள் கேள்விப்பட்டவைகள் ஜீவனுள்ள தேவனிடம் அவள் விசுவாசம் வைக்கும்படி உதவின. “கர்த்தர் உங்களுக்குத் தேசத்தை ஒப்புக் கொடுத்தார்” எனக் கூறினாள். வசனத்தைக் கேட்டவர்களில் ராகாபுக்கு மட்டும் கீழ்படியும் விசுவாசம் இருந்தது. மற்றவர்களைக் கீழ்படியாதவர்கள் என்று வேதம் கூறுகிறது. அவள் அதைச் செயலில் நிரூபித்தாள். அவள் கிரியைகளினாலே அவள் நீதிமானாக்கப்பட்டாள். நாட்டை ஒற்றுப் பார்க்க வந்த மனிதரை ஒளித்து வைத்தது அவள் செய்தது தேச துரோகம் என நினைக்கலாம். ஆனால் அது தேவ துரோகம் பண்ணிய மக்களுக்கு எதிரான அவளது எதிர் நீச்சலாய் விளங்கியது. ராகாப் பொய் சொன்னதற்கு அடிப்படைக் காரணமாக விளங்கியது அவள் விசுவாசமே. ஜீவதேவனைப் பற்றிக் கொண்டு சாவுக்குத் தப்பும் வாய்ப்பு அவர்கள் எல்லாருக்கும் தான் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் ராகாப் சத்தியத்தை அறிந்திருந்தபடியினால் வாய்ப்பைச் சரியாய்ப் பயன்படுத்தினாள்.

**2. சகோதரத்துவத்தைக் காப்பாற்றினாள்:-**

ராகாப் வேவுகாரருக்குப் பாராட்டின தயைக்கு ஈடாக தேசம் அவர்களுக்கு கொடுக்கப்படும் போது அவளையும் அவளது குடும்பத்தாரையும் சாவுக்குத் தப்புவிக்கும்படி விண்ணப்பித்தாள். அவளது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட வேவுக்காரர் சிவப்பு நூல் கயிற்றை, அவர்களை இறக்கி விடப்பட்ட ஜன்னலிலே கட்டி வைக்கக் கூறினர். தேசத்தை தேவன் இஸ்ரவேலர் கையில் ஒப்புக்கொடுத்த போது, வேவுகாரர் தங்கள் வாக்கைக் காப்பாற்றி ராகாபையும் அவள் வீட்டாரையும் பாதுகாத்தனர். ராகாப் வேசியானாலும் குடும்பப் பாசம் மிகுந்தவள். தன் தகப்பனையும், தாயையும், சகோதர சகோதரிகளையும் அவர்களுக்கு உண்டான யாவற்றையும் காப்பாற்றும் ஒரு ஆதாய முயற்சியிலும் அவள் உடனே ஈடுபட்டாள். தூதர்களை சமாதானத்தோடு ஏற்றுக் கொண்டதோடு அவர்கள் புறப்பட்டுச் சென்றவுடன் சிவப்பு நூலை அடையாளமாக ஜன்னலிலே கட்டி வைத்தாள். யுத்தம் வரும்வரை காத்திருக்கவில்லை. அந்த வீட்டினுள் அவர்கள் யாவரும் இருந்தபோதுதான் அவர்களுக்கு பாதுகாப்புக் கிடைத்தது. இப்படியாக தன் குடும்பத்தையும், சகோதரத்துவத்தையும் காப்பாற்றினாள்.

**3. சரித்திரத்தில் இடம் பெற்றாள்:-**

ஆக்கினைத் தீர்ப்புக் கூறப்பட்ட காலத்திற்கும், அழிக்கப்பட்ட காலத்திற்கும் இடையே நல்லதொரு கிருபையின் காலமும் எரிகோ மக்களுக்குக் கிடைத்தது. அந்தக் கிருபையின் காலத்தில் அவர்கள் யாவரும் ஜீவனுள்ள தேவனைப் பற்றி அறியவும், அவருடைய செயல்களைக் குறித்துக் கேள்விப்படவும் நல்ல வாய்ப்பு கிடைத்தது. முழு தேசமும் தேவனுடைய நியாயத் தீர்ப்பைப் பெற்று அழிக்கப்பட்ட போது, விசுவாசித்தவளே பாக்கியவதியானாள். கர்த்தரால் அவள் பாதுகாப்பைப் பெற்றாள். விசுவாசிக்கிற மக்களைப் பரலோக சுதந்தரவாளியாக மாற்றுவது போல தேவன் தமது ஜனத்துக்கு சுதந்தரமாகத் தந்த கானானின் பங்கையும் பாக்கியத்தையும் ராகாபுக்கும் கொடுத்தார். அதோடு நின்றுவிடவில்லை. அவளைக் கோத்திரத்து பிரபுவான நகசோனின் மகன் சல்மோன் திருமணம் செய்தான். நேர்த்தியான இடங்களில் அவளுக்குத் தேவன் பங்கு கொடுத்து, சிறப்பான சுதந்தரத்தால் அவளை ஆசீர்வதித்தார். அவள் மகன் போவாஸ். போவாஸின் கொள்ளு பேரன்தான் தாவீது. அவன் சந்ததியில் தான் மேசியா பிறந்தார். ராகாப் மனந்திரும்பி தேவனை ஏற்றுக் கொண்டபடியால் சரித்திரத்தில் இடம் பெற்றாள்.

ஆம், அன்பானவர்களே, நம் ஆண்டவர் எப்பொழுதும் உலகம் புறக்கணிக்கும் நபர்களை தம்மிடமாய்ச் சேர்த்துக் கொண்டு அவர்களுக்கு நன்மை செய்பவர். இறைவனிடம் நன்மை பெற்ற இல்லத்தரசிகளில் ராகாபும் ஒருவர் என்பதை நாம் அறிந்து கொள்ள ஆண்டவர் உதவி செய்தார். சத்தியத்தில் அவரை நடத்தி அவரது குடும்பத்தை பாதுகாத்து சரித்திரத்தில் இடம்பெற ராகாபுக்கு உதவின ஆண்டவர் நம்மையும் நினைத்து ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி. ஸ்மைலி சுதாகர்
ஆயரம்மா, துபாய்.

## கற்போம் கிரேக்கம் - 14

### கிரேக்க மொழியின் பதிமூன்றாவது எழுத்து

N ν - கிரேக்க எழுத்துக்களின் பதிமூன்றாவது எழுத்து, இது ஆங்கில எழுத்து N,n க்கு ஈடானது.

**வார்த்தை**

Nous (**νοῦς**) - கிரேக்க மொழியில் "நூஸ்" என்பது வெறும் புத்திசாலித்தனத்தை மட்டும் குறிக்காமல், சத்தியத்தைப் பகுத்தறியும் மனதின் ஆழமான திறனைக் குறிக்கிறது. இது கண்களுக்குத் தெரியாத ஆவிக்குரிய உண்மைகளைப் புரிந்துகொள்ளவும், வாழ்க்கையின் மேலான எதார்த்தங்களை உணரவும் உதவும் ஒரு உயர் ஆற்றலாகும். வேதாகமப் பின்னணியில், இந்த "மனம்" என்பது நாம் தேவனை அறிந்து விசுவாசத்தோடு அவருக்குப் பதிலளிக்க உதவுகிறது. இருப்பினும், பாவத்தினால் கறைபடிந்த இந்த மனம் தேவனுடைய கிரியையினால் புதுப்பிக்கப்பட வேண்டியது அவசியமென வேதாகமம் வலியுறுத்துகிறது.

**மனம்: நன்மையாகப் படைக்கப்பட்டு பாவத்தால் சேதமடைந்தது**

வேதாகமத்தில் "மனம்" என்பது வெறும் புத்திசாலித்தனம் அல்லது சிந்திக்கும் திறன் மட்டுமல்ல, அது சத்தியத்தைப் புரிந்துகொள்வது, முடிவுகளை எடுப்பது மற்றும் எது சரி எது தவறு என்று தீர்மானிப்பது ஆகியவற்றையும் உள்ளடக்கியது. மனிதன் தேவனையும் அவருடைய சித்தத்தையும் அறிந்து அதன்படி வாழ்வதற்காகவே அவனுடைய மனதை தேவன் படைத்தார் (ஆதியாகமம் 1:27, பிரசங்கி 7:29). இருப்பினும், பாவத்தினால் மனம் ஆழமாகப் பாதிக்கப்பட்டு, அது செயல்பட வேண்டிய விதத்தில் செயல்படாமல் போனது. சத்தியத்தைத் தெளிவாக அங்கீகரிப்பதற்குப் பதிலாக, அது குழப்பமடைந்து, சுயநலம் கொண்டு, தேவனுக்கு விரோதமாக மாறுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் இந்த நிலையை விளக்கும்போது, மக்கள் "கேடான சிந்தை" (Debased mind) உள்ளவர்களாக ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள் என்று கூறுகிறார் (ரோமர் 1:28). அதாவது அவர்களின் சிந்தனை சிதைந்துபோனது - அவர்கள் தீமையை நன்மை என்றும், நன்மையை தீமை என்றும் சொல்லத் தொடங்கினார்கள் (ஏசாயா 5:20). பாவம் என்பது செயல்களை மட்டும் பாதிப்பதில்லை. அது மனிதர்கள் சிந்திக்கும் மற்றும் நியாயப்படுத்தும் விதத்தையே மாற்றியமைக்கிறது.

எபேசியர் நிருபம் இதை “தங்கள் மனதின் வீணான சிந்தையிலே” நடப்பதாகவும், “புத்தியில் அந்தகாரப்பட்டு” இருப்பதாகவும் விவரிக்கிறது (எபேசியர் 4:17-18). விசுவாசிகள்கூட ஒரு உள் போராட்டத்தை அனுபவிக்கிறார்கள், மனதின் பிரமாணத்திற்கும் பாவத்தின் வல்லமைக்கும் இடையே ஒரு போராட்டம் இருப்பதாக பவுல் கூறுகிறார் (ரோமர் 7:23). மனம் என்பது நடுநிலையானது அல்ல - அது சத்தியத்திற்கும் பொய்க்கும், கீழ்ப்படிதலுக்கும் கீழ்ப்படியாமைக்கும் இடையிலான ஒரு போர்க்களமாகும். எனவே, மனித மனதிற்கு கல்வி மட்டும் போதாது. அதற்கு தேவன் அளிக்கும் மறுரூபமும் குணமடைதலும் தேவை.

## கிறிஸ்துவினால் திறக்கப்பட்ட மனம்: தேவனிடமிருந்து வரும் அறிவு

உண்மையான அறிவு என்பது மனித முயற்சியால் மட்டும் வருவதல்ல, அது தேவனிடமிருந்தே வருகிறது என்பதை வேதாகமம் தெளிவுபடுத்துகிறது. இதற்கு ஒரு சிறந்த உதாரணம், இயேசு உயிர்த்தெழுந்த பிறகு தமது சீஷர்களுக்குக் காட்சியளித்த நிகழ்வாகும். அவர்கள் இயேசுவின் போதனைகளைக் கேட்டிருந்தும், வேதவசனங்களை அறிந்திருந்தும், தேவனுடைய திட்டத்தை அவர்களால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. அப்பொழுது இயேசு “வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதைத் திறந்தார்” (லூக்கா 24:45). இது ஆவிக்குரிய அறிவு என்பது தேவனிடமிருந்து வரும் ஒரு ஈவு என்பதைக் காட்டுகிறது. இது வெறும் வாசிப்பதாலோ அல்லது அதிகம் படிப்பதாலோ மட்டும் வருவதல்ல, மாறாக சத்தியத்தைத் தெளிவாகக் காணும்படி தேவன் நமக்குக் கொடுக்கும் கிருபையாகும். அவ்வாறே, “கர்த்தர் ஞானத்தைத் தருகிறார் அவருடைய வாயினின்று அறிவும் புத்தியும் வரும்” என்று நீதிமொழிகள் கற்பிக்கிறது (நீதிமொழிகள் 2:6). தேவன் மனதைத் திறக்கும்போது, வேதவாக்கியங்கள் அனைத்தும் கிறிஸ்துவை எப்படிக் காட்டுகின்றன என்பதை நாம் புரிந்துகொள்ளத் தொடங்குகிறோம் (யோவான் 5:39). விசுவாசிகள் தேவனால் அருளப்பட்டவைகளை அறிந்துகொள்ளும்படி அவருடைய ஆவியைப் பெற்றிருக்கிறார்கள் என்று பவுல் கூறுகிறார் (1 கொரிந்தியர் 2:12). மேலும் அவர் தொடர்ந்து, “நமக்குக் கிறிஸ்துவின் சிந்தை உண்டு” என்றும் கூறுகிறார் (1 கொரிந்தியர் 2:16). இதன் பொருள் என்னவென்றால், பரிசுத்த ஆவியின் மூலம் நமது சிந்தனை கிறிஸ்துவின் ஞானம், தாழ்மை மற்றும் சத்தியத்தைப் பிரதிபலிக்கும் வகையில் மாற்றியமைக்கப்படுகிறது (பிலிப்பியர் 2:5). நாம் எல்லாவற்றையும் அறிந்தவர்களாக மாறாவிட்டாலும், வாழ்க்கையைத் தேவனுடைய பார்வையிலிருந்து பார்க்கத் தொடங்குகிறோம். இவ்வாறு, கிறிஸ்தவ வாழ்க்கையில் மனம் புறக்கணிக்கப்படுவதில்லை - அது கிறிஸ்துவினால் புதுப்பிக்கப்பட்டு, வழிநடத்தப்பட்டு, ஒளிபெறுகிறது.

### மறுரூபமான மனம்: உருமாற்றப்படும் வாழ்க்கை

கிறிஸ்தவ வாழ்க்கையின் மாற்றம் மனதின் மறுரூபத்துடனேயே தொடங்குகிறது. ரோமர் 12:2 தெளிவாகக் கற்பிக்கிறது: "நீங்கள் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்." விசுவாசிகள் இந்த உலகத்தின் சிந்தனை முறைகளைப் பின்பற்றாமல், தேவன் தங்கள் புத்தியை மறுசீரமைக்க அனுமதிக்க வேண்டும் என்பதே இதன் பொருள். உலகம் நம்முடைய மதிப்புகள், முன்னுரிமைகள் மற்றும் நம்பிக்கைகளைத் தொடர்ந்து பாதிக்க முயற்சிக்கிறது (1 யோவான் 2:15-16). நாம் அறியாமலேயே, தேவனுடைய சத்தியத்திற்கு முரணான சிந்தனை முறைகளை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் தேவன் நம் மனதைப் புதுப்பிக்கும்போது, நாம் காரியங்களை வித்தியாசமாகப் பார்க்கத் தொடங்குகிறோம் - தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று நாம் பகுத்தறிகிறோம் (ரோமர் 12:2). இந்தப் புதுப்பித்தல் என்பது வெறும் அறிவைப் பெறுவது மட்டுமல்ல நாம் சிந்திக்கும், தீர்மானிக்கும் மற்றும் வாழ்க்கைக்குப் பதிலளிக்கும் விதத்தில் ஏற்படும் ஆழமான மாற்றமாகும். உங்கள் "மனதின் ஆவியிலே புதிதாக்கப்பட்டு" (எபேசியர் 4:23), எந்தச் சிந்தனையையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும்படி சிறைப்படுத்த வேண்டும் என்று பவுல் கூறுகிறார் (2 கொரிந்தியர் 10:5). இந்த செயல்முறை வேதவசனம் (சங்கீதம் 119:105), ஜெபம், போதனை மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றின் மூலம் காலப்போக்கில் நிகழ்கிறது. நம் மனது புதுப்பிக்கப்படும்போது, நாம் ஞானமான முடிவுகளை எடுக்கிறோம், பாவத்தை இன்னும் திறம்பட எதிர்க்கிறோம், தேவனுடைய சித்தத்தைப் பிரதிபலிக்கும் வகையில் வாழ்கிறோம். இந்த மறுரூபம் என்பது தேவன் நமக்குள்ளே செய்யும் கிரியையாகவும் (பிலிப்பியர் 2:13), நாம் நாடித் தேட வேண்டிய பொறுப்பாகவும் இருக்கிறது (கொலோசெயர் 3:2).

### அன்றாட வாழ்க்கையிலும் ஐக்கியத்திலும் மனதின் பங்கு

மறுரூபமடைந்த மனம் தனிப்பட்ட வாழ்க்கையில் மட்டுமல்லாமல், உறவுகளிலும் சபை வாழ்விலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. விசுவாசிகள் கவனமாகச் சிந்தித்து, உறுதியான நற்கருத்துக்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று வேதாகமம் கற்பிக்கிறது. உதாரணமாக, சுதந்திரமான காரியங்களில், "அவனவன் தன் தன் மனதிலே நிச்சயித்திருக்கக்கடவன்" (ரோமர் 14:5). அதே சமயம், கிறிஸ்தவர்கள் "ஒரே மனதும் ஒரே யோசனையும் உள்ளவர்களாய்" இருந்து ஒருமைப்பாட்டுடன் இருக்க அழைக்கப்படுகிறார்கள் (1 கொரிந்தியர் 1:10). இதன் பொருள் எல்லாரும் எல்லாவற்றிலும் உடன்பட வேண்டும் என்பதல்ல, மாறாக நமது சிந்தனை ஒரே சத்தியத்தினால் - அதாவது கிறிஸ்துவினாலும் அவருடைய சுவிசேஷத்தினாலும் - உருவாக்கப்பட வேண்டும் என்பதாகும். விசுவாசிகள் "ஒரே சிந்தையுள்ளவர்களாய் இருந்து, ஒரே அன்புள்ளவர்களாய்" இருக்க வேண்டும் என்று பவுல் ஊக்கப்படுத்துகிறார் (பிலிப்பியர் 2:2).

இது ஒற்றுமை என்பது கிறிஸ்துவில் வேரூன்றிய பொதுவான சிந்தனையிலிருந்து வருகிறது என்பதைக் காட்டுகிறது. ஆராதனையிலும் ஆவிக்குரிய செயல்பாடுகளிலும் மனது முக்கியமானது. 1 கொரிந்தியர் 14:14-15 இல், ஜெபமும் ஆராதனையும் மற்றவர்கள் பக்திவிருத்தி அடையும்படி புத்தியோடும் (புரிந்து கொள்ளுதலோடும்) இருக்க வேண்டும் என்று பவுல் விளக்குகிறார். உண்மையான ஆவிக்குரிய வாழ்க்கை என்பது வெறும் உணர்ச்சிப் பெருக்கு மட்டுமல்ல - அது தெளிவான சிந்தனையையும் அர்த்தமுள்ள புரிதலையும் உள்ளடக்கியது (கொலோசெயர் 3:16). புதுப்பிக்கப்பட்ட மனம் விசுவாசிகளுக்கு நன்மையையும் தீமையையும் பகுத்தறிய உதவுகிறது (எபிரெயர் 5:14), ஞானமான முடிவுகளை எடுக்கவும், மற்றவர்களுடன் இணக்கமாக வாழவும் உதவுகிறது. இது அன்றாட வாழ்க்கையில் அன்பு, ஞானம் மற்றும் ஒழுங்குடன் விசுவாசத்தைச் செயல்படுத்துவதற்கான ஒரு நடைமுறைக் கருவியாக மாறுகிறது.

### தேவனுடைய மகிமைக்காக மறுரூபமாக்கப்பட்ட மனம்

வேதாகமம் மனித மனதைப் பற்றிய தெளிவான மற்றும் சமநிலையான புரிதலை வழங்குகிறது. மனம் மதிப்புமிக்கது மற்றும் தேவனால் படைக்கப்பட்டது என்பதையும், அதே சமயம் பாவத்தினால் ஆழமாகப் பாதிக்கப்பட்டு மறுரூபம் அடைய வேண்டிய நிலையில் உள்ளது என்பதையும் இது காட்டுகிறது. மனதை அதன் சுய வழியில் நம்ப முடியாது (நீதிமொழிகள் 3:5), ஆனால் அதே சமயம் தேவன் அதை நிராகரிக்கவும் இல்லை. மாறாக, தேவன் இயேசு கிறிஸ்துவின் மூலமாகவும் பரிசுத்த ஆவியின் கிரியையினாலும் மனதை மீட்டு உருமாற்றுகிறார். விசுவாசிகளாகிய நாம், தேவன் நமது சிந்தனையைப் புதுப்பிக்கவும், நமது புரிதலை மறுசீரமைக்கவும், நம் வாழ்வை வழிநடத்தவும் நம்மை ஒப்புக் கொடுக்க அழைக்கப்படுகிறோம். இந்த மாற்றம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் பாதிக்கிறது. நாம் சிந்திக்கும் விதம், நாம் செயல்படும் விதம் மற்றும் நாம் பிறரோடு பழகும் விதம் என அனைத்தையும் மாற்றுகிறது.

நமது மனது புதுப்பிக்கப்படும்போது, நாம் பகுத்தறிவு, ஒருமைப்பாடு மற்றும் கீழ்ப்படிதலில் வளருகிறோம், தேவனுடைய சித்தத்தின்படி வாழக் கற்றுக்கொள்கிறோம். இறுதியில், நம்முடைய எண்ணங்கள், விருப்பங்கள் மற்றும் செயல்கள் முழுமையாக அவரோடு இசைந்திருக்க வேண்டும் என்பதே தேவனுடைய நோக்கமாகும் (2 கொரிந்தியர் 10:5, ரோமர் 8:5-6). எனவே, மனதின் மறுரூபம் என்பது கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒரு சிறிய பகுதி அல்ல - அது தேவன் நம்மை அழைத்தபடி மாறுவதற்கும், எல்லாவற்றிலும் அவருடைய மகிமைக்காக வாழ்வதற்கும் மையமாக இருக்கிறது.

கிறிஸ்துவின் சேவையில்
அருட்திரு. ராஜ் குமார் ஜான் வெஸ்லி
ஆயர், தமிழ் திருச்சபை, ஃபுஜைரா

## வேதத்தில் பெண்கள்-13

### பெண்கள்: நீதியையும் ஒழுக்கத்தையும் நிலைநாட்டும் விசுவாசக் கருவிகள்
### பெண்களின் தீர்க்கதரிசனக் குரல்

வேதாகமத்தை வாசிக்கும் போது, பெரும்பாலும் விசுவாசத் தகப்பன்கள், ராஜாக்கள், தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலர்கள் பற்றிய நிகழ்வுகளே அதிக முக்கியத்துடன் கவனிக்கப்படுகின்றன. ஆனால் பரிசுத்த வேதாகமத்தின் வரலாற்றை ஆழமாக ஆராய்ந்தால், இன்னொரு முக்கியமான உண்மை வெளிப்படுகிறது: தேவன் பல சமயங்களில் எதிர்பாராத நபர்களை பயன்படுத்தி, சீர்குலைந்த நீதியையும் ஒழுக்கத்தையும் மீண்டும் நிலைநாட்டுகிறார்.

இந்தச் சூழலில், வேதாகமப் பெண்கள் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றனர். அவர்கள் வெறும் துணைப் பாத்திரங்களாக அல்லாமல், தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்தும் தீர்க்கதரிசனக் குரல்களாகவும், நெறி திருத்தும் கருவிகளாகவும் செயல்படுகின்றனர். அவர்களின் வாழ்க்கை, விசுவாசம், ஞானம், துணிவு மற்றும் தியாகம் ஆகியவற்றின் மூலம் தனிநபர்களையும் சமூகங்களையும் தேவனுடைய நீதியின் பாதைக்கு திருப்பியமைக்கின்றது.

எனவே, அவர்கள் எவ்வாறு தேவனுடைய கரங்களில் நீதியையும் ஒழுக்கத்தையும் நிலைநாட்டிய கருவிகளாக இருந்தார்கள் என்பதையும் அதேசமயம், அவர்களின் சாட்சியங்கள் இன்றைய விசுவாச வாழ்விற்கும் வழங்கும் ஆவிக்குரிய பயன்களைப் பற்றியும் சிந்திக்க அழைக்கிறது.

### ஞானமும் நீதியும் - அபிகாயில் மற்றும் எஸ்தர்

#### அபிகாயில்: மனசாட்சியின் சத்தம் (1 சாமுவேல் 25)

அபிகாயிலின் சரித்திரம், ஒரு பெண்ணின் ஞானம் எப்படி ஒரு பெரும் இரத்தப்பழியையும், பாவத்தையும் தடுக்கும் என்பதற்குச் சான்றாக இருக்கிறது. இஸ்ரவேலின் வருங்கால ராஜாவாகிய தாவீது, ஒரு இக்கட்டான வேளையில் தன் மாம்சத்தின் கோபத்திற்கு இடங்கொடுத்தார். மூடன் ஆகிய நாபால் செய்த நிந்தனையினால், தாவீது ஒரு குடும்பத்தையே அழிக்கப் புறப்பட்டார்.

அந்த வேளையில், அபிகாயில் யாருடைய அனுமதிக்கும் காத்திருக்கவில்லை. அவள் “செயல்பாட்டு ஞானத்துடன்” (Active Wisdom) முன்வந்தாள். அவள் தாவீதை நோக்கி: “என் ஆண்டவன்மேல் எந்தக் குற்றமும் காணப்படக் கூடாது... கர்த்தர் என் ஆண்டவனுக்கு நிலையான வீட்டைக் கட்டுவார்” என்று கூறி, அவரது உயர்ந்த அழைப்பை நினைவூட்டினாள். அவள் தன் கணவனை மட்டும்

காப்பாற்றவில்லை, மாறாகத் தாவீது ஒரு இரத்தப்பழி சுமந்து தன் அபிஷேகத்தைக் கெடுத்துக் கொள்ளாதபடி அவரைக் காப்பாற்றினாள். தேவன் ஒரு பெண்ணின் வாயின் வார்த்தைகளைக் கொண்டு, வருங்கால ராஜாவையே நல்வழிப்படுத்தினார்.

### எஸ்தர்: அநீதியை முறியடித்த தைரியம் (எஸ்தர் 4-7)

அபிகாயில் ஒரு தனிமனிதனின் கோபத்தைத் தடுத்தார் என்றால், எஸ்தரோ ஒரு முழு இனத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதியைத் தடுத்தார். ஒரு அந்நிய தேசத்தில், தன் உயிருக்கு ஆபத்து இருக்கும் சூழலில், எஸ்தர் ஒரு தீர்மானம் எடுத்தார்: "மௌனமாய் இருப்பதா? அல்லது மரித்தாலும் மரிக்கிறேன் என்று நீதிக்காக நிற்பதா?"

அவளுடைய செயல் வெறும் தைரியம் மட்டுமல்ல, அது ஒரு ஆவிக்குரிய போர். ராஜாக்களின் சட்டங்களை விட, தேவாதி தேவனின் நீதி மேலானது என்பதை அவள் நிரூபித்தாள். தேவனுடைய பெயர் இந்த புத்தகத்தில் வெளிப்படையாகக் காணப்படாவிட்டாலும், எஸ்தரின் மூலமாகத் தேவன் ஆடிய அந்தப் பெரும் "நீதியின் திருப்புமுனை" இன்றும் நமக்கு ஒரு பாடம். ஒரு பெண், அடிமைத்தனமான சூழலிலும் தேவனது விடுதலையின் கருவியாக மாற முடியும் என்பதற்கு எஸ்தரே சாட்சி.

## விசுவாசமும் பக்தியும் - சீரோபெனிக்கிய பெண் மற்றும் மரியாள்

### சீரோபெனிக்கிய பெண்: கிருபையின் எல்லையை விரிவுபடுத்தியவள் (மாற்கு 7:24-30)

புதிய ஏற்பாட்டில், ஒரு அந்நிய நாட்டுப் பெண் இயேசுவோடே உரையாடி, ஒரு ஆழமான உண்மையை வெளிப்படுத்துவதைக் காண்கிறோம். தன் மகளின் விடுதலைக்காக வந்த அவளிடம், இயேசு சோதிக்கும் பொருட்டு ஒரு உவமையைக் கூறினார். அவள் அதற்குப் பதில் சொல்லும்போது, "மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளையும் நாய்க்குட்டிகள் தின்னுமே" என்று கூறி, தேவனுடைய கிருபையின் அளவற்ற தன்மையைச் சுட்டிக்காட்டினாள்.

அவளுடைய பதில், இஸ்ரவேலருக்குத் தெரிந்திருக்க வேண்டிய ஒரு உண்மையை-அதாவது தேவனுடைய இரட்சிப்பு எல்லா ஜாதிகளுக்கும் உரியது என்பதை உறுதிப்படுத்தியது. அவள் ஒரு "இறையியல் திருத்தத்தை" (Theological Corrective) அந்த இடத்தில் செய்தாள். விசுவாசம் என்பது மௌனமாய் இருப்பது அல்ல் அது தேவனுடைய அன்பின் ஆழத்தை உறுதியாகப் பற்றிக்கொள்வதாகும் என்பதை இவள் உலகிற்கு உணர்த்தினாள்.

### பெத்தானியா மரியாள்: ஆராதனையின் தீர்க்கதரிசி (யோவான் 12:1-8)

இறுதியாக, பெத்தானியா மரியாளைப் பார்ப்போம். இவள் செய்த காரியம் அக்காலத்து "உலகப்பிரகாரமான கணக்குகளை" மாற்றியது. இயேசுவின் பாதங்களில் விலையுயர்ந்த தைலத்தை ஊற்றியபோது, சுற்றியிருந்த ஆண்கள் அதை "வீண் செலவு" என்று கண்டித்தார்கள்.

ஆனால், சீஷர்களால் காண முடியாத ஒன்றை மரியாள் கண்டாள். இயேசுவின் மரணத்தையும், அடக்கத்தையும் முன்னதாகவே உணர்ந்து செய்த ஒரு தீர்க்கதரிசனச் செயலாக அது இருந்தது. மற்றவர்கள் "பணத்தின் மதிப்பைப்" பார்த்த இடத்தில், இவள் "இரட்சகரின் மகிமையைப்" பார்த்தாள். மெய்யான பக்தி என்பது ஒருபோதும் வீணாகாது என்பதையும், ஒரு பெண்ணின் ஆராதனை தேவனுடைய இருதயத்திற்கு எவ்வளவு நெருக்கமானது என்பதையும் மரியாள் நிரூபித்தாள்.

நீதியின் கருவிகளாக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்
இந்த நான்கு பெண்களின் வாழ்க்கையையும் நாம் ஒருசேரப் பார்க்கும்போது, ஒரு தெளிவான உண்மை புலப்படுகிறது. இவர்கள் வரலாற்றின் ஓரத்தில் நின்று வேடிக்கை பார்த்தவர்கள் அல்ல.

- அபிகாயில் - கோபத்தின் பாவத்தைத் தடுத்தார்.
- எஸ்தர் - இனப்படுகொலையின் அநீதியைத் தடுத்தார்.
- சீரோபெனிக்கிய பெண் - கிருபையின் மகத்துவத்தை உணர்த்தினார்.
- மரியாள் - மெய்யான ஆராதனையின் ஆழத்தைக் காட்டினார்.

இவர்கள் எவருக்கும் ஆலயத்திலோ, அரண்மனையிலோ அதிகாரப்பூர்வமான பதவிகள் இருக்கவில்லை. இருப்பினும், தேவன் இவர்களைக் கொண்டே மீட்பின் சரித்திரத்தைத் திருத்தி எழுதினார். தேவன் பட்சபாதம் உள்ளவர் அல்ல் யார் ஒருவன் (அல்லது ஒருத்தி) விசுவாசத்தோடும், துணிவோடும் செயல்படுகிறார்களோ, அவர்களையே அவர் பயன்படுத்துகிறார்.

இன்று நம்முடைய வீடுகளிலும், சபைகளிலும், சமுதாயத்திலும் கூடப் பல ஒழுக்கச் சீர்கேடுகள் வரலாம். கோபம், அநீதி, குறுகிய மனப்பான்மை போன்றவை தலைதூக்கும்போது, நாம் அமைதியாக இருக்கக் கூடாது.

வேதாகமத்தில் நாம் கண்ட இந்த விசுவாசச் சகோதரிகளைப் போலவே, நாமும் "நீதியை நிலைநாட்டும் கருவிகளாக" மாற அழைக்கப்பட்டுள்ளோம். கோபத்தைத் தணிக்கும் சமாதானக் குரலாகவும், அநீதியைத் தட்டிக் கேட்கும் தைரியமாகவும், தேவனை முழுமையாய் நேசிக்கும் ஆராதனை வீராங்கனைகளாகவும் நாம் எழும்ப வேண்டும். இறுதியில், இந்தப் பெண்கள் யாவரும் நம்மை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடமே வழிநடத்துகிறார்கள். அவரே நீதியின் சூரியன் அவரே நம்மைத் தந்தையோடு ஒப்புரவாக்கிய உன்னத "நீதி" ஆவார்.

கிறிஸ்துவின் சேவையில்
திருமதி பாலின் எமிமா
ஆயரம்மா, தமிழ் திருச்சபை, ஃபுஜைரா

# இராஸ் அல் கைமா போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் ஈஸ்டர் பண்டிகை வாழ்த்துக்களை இராஸ் கைமா திருச்சபையின் சார்பாக தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஆரம்பகால திருச்சபை கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை மிகப்பெரிய மகிழ்ச்சியின் அனுபவத்தோடு கொண்டாடினார்கள். ஆனால் இன்று கிறிஸ்து பிறப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அதன் வழியாக உலகம் அதிக சந்தைப்படுத்துதல் மூலமாக பணத்தை சார்ந்ததாக மாறிவிட்டது. கிறிஸ்துவின் உயிர்ப்பின் மூலமாகத்தான் கிறிஸ்தவம் தோன்றினது என்பதையும், வளர்ந்திருக்கிறது என்பதையும் மறந்துவிட்டோம். அன்று எம்மாவூருக்கு கடந்து சென்ற சீஷர்கள் கலங்கித் திகைத்து தங்களுக்குள்ளாக நம்பிக்கையற்ற நிலையில் இருந்த சீடர்களுக்கு உயிர்த்தெழுந்த ஆண்டவர் தன்னை வெளிப்படுத்தி நம்பிக்கை கொடுத்தார். இன்று இப்படி கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை குறித்து அவர் உயிரோடு எழுந்தார் அவர் ஜீவாதிபதியாக இருக்கிறார் என்பதற்கு நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற அடையாளங்களையும், சாட்சிகளையும் அறிந்து கொண்டு கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளை மகிழ்ச்சியோடு, நம்பிக்கையோடு ஆசரிப்போம்.

### 1. வெறுமையான திறக்கப்பட்ட கல்லறை:- (யோவான் 20:1)

உலக வரலாற்றில் மாமனிதர்கள், சமயத்தலைவர்கள், தேசத் தலைவர்கள் என பலர் மரித்தபின்பு அவர்களை அடக்கம் செய்யப்பட்ட கல்லறைகள் அல்லது அவர்களுடைய அஸ்தி வைக்கப்பட்ட இடங்கள் இன்றளவும் மூடியே கிடக்கின்றன. அவைகளை பார்க்க வருகிற கூட்டங்களும், நினைவு கூறுகிற மக்களும் ஒவ்வொரு வருடமும் நினைவுகூர்ந்து நம்பிக்கையில்லாமல் செல்கின்றனர். ஆனால் கிறிஸ்துவின் சரீரம் அடக்கம் பண்ணப்பட்ட கல்லறை இன்றைக்கும் வெறுமையான, திறக்கப்பட்ட கல்லறையாக இருந்து இயேசு ஜீவாதிபதி என்பதை உறுதிப்படுத்துகிறது.

இயேசுவானவர் தனது ஊழியக்காலத்தில் தான் இந்த உலகத்திற்காக சிலுவையில் மரணமடைந்து மூன்றாம்நாள் உயிர்த்தெழுவேன் என்பதை நேரடியாகவும், மறைமுகமாகவும் தன்னோடு இருந்த மக்கள் மத்தியிலும், சீஷர்கள் மத்தியிலும் அடிக்கடி கூறினார். இதனால் யூதர்களும், சமயத் தலைவர்களும் அவர் உயிரோடு எழும்பக்கூடாது என்பதில் உறுதியாக இருந்து இயேசுவானவரின் சரீரம் வைக்கப்பட்ட கல்லறைக்கு முத்திரை வைத்து காவல் வைத்தனர். (மத்தேயு 27: 62-66) ஆனால் நடந்தது என்ன?

மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம் நாள் எழுந்திருக்கவும் (லூக்கா 24:7) என்று அவர் சொன்னபடியே, மூன்றாம் நாளிலே அவருடைய சரீரத்திற்கு நறுமண தைலத்தை பூசும்படியாக வந்த மகதலேனா மரியாள் அவரது சரீரம் வைக்கப்பட்டிருந்த கல்லறை திறந்திருக்கிறதையும், அவருடைய சரீரம் அங்கு இல்லாமல் கல்லறை வெறுமையாக இருந்ததை அறிந்து கண்ணீரோடு நிற்கும் பொழுது, உயிர்த்தெழுந்த ஆண்டவர் முதன்முதலாக மரியாளுக்கு தரிசனம் கொடுத்து தான் உயிர்த்தெழுந்ததை உறுதிப்படுத்தி அதை சீஷர்களுக்கும் போய் அறிவிக்கும்படி சொன்னார். ஆம் முத்திரையிடப்பட்ட கல்லறையை வெறுமையாக்கி, அன்றும் இன்றும் அவரை நம்பி இருக்கிறவர்களுக்கு நம்பிக்கையை கொடுத்து தான் ஜீவாதிபதி என்பதை கிறிஸ்து உறுதிப்படுத்துகிறார்.

### 2. தேவதூதர்களின் சாட்சி:- (லூக்கா 24:6)

சட்டபூர்வமாக எந்த ஒரு சம்பவத்திலும் சாட்சிகள் இருந்தால்தான் நடந்தது உண்மையா, இல்லையா என்பதை நிரூபணம் செய்யமுடியும் அப்படியிருந்தும் ஒரு சாட்சியிருந்தால் அது செல்லுபடியாகாது. ஒன்றுக்கும் மேற்பட்ட சாட்சிகள் இருந்தால்தான் சம்பவத்தை நிரூபிக்க முடியும். இயேசுவின் பிறப்பின் நாட்களில் தேவதூதர்களுடைய சாட்சி முக்கியமானதாக இருந்தது. மேசியா அல்லது இரட்சகர் என்பவர் யூதர்களை மாத்திரம்தான் இரட்சிப்பவர் என்ற பயத்தைப் போக்கி அவர் எல்லாருக்கும் இரட்சகராக பிறந்திருக்கிறார் (லூக்கா 2:10,11) என்று ஏழைகளான மேய்ப்பர்களிடம் தேவதூதர்கள் பிரகடனப்படுத்தியது இயேசுவானவர் உலகத்தில் எதற்காக வருகிறார் என்பதை உறுதிப்படுத்தியது. இதுபோலத்தான் இயேசு உயிர்த்தெழுந்த சமயத்திலும் தேவதூதர்களுடைய சாட்சி பிரதானமாக இருந்தது. யூத பாரம்பரியத்தின்படி மரித்த ஒருவருடைய சரீரத்திற்கு தைலம் பூசி சுகந்தவர்க்கமிடும் சடங்கை வைத்திருந்தனர். சீஷர்கள் யூதர்களுக்கும், ரோமர்களுக்கும் பயந்து, ஒளிந்து இருந்தபடியினால் இதை அவர்கள் சார்பாக நிறைவேற்றுவதற்கு மகதலேனா மரியாளும் மற்றும் சில பெண்களும் இயேசுவின் கல்லறைக்கு சென்றனர். அப்பொழுது கல்லறை திறந்திருக்கிறதையும், கல்லறையில் பிரவேசித்து இயேசுவின் சரீரத்தைக் காணாமல் திகைத்துக் கொண்டு பயந்த நிலையிலிருந்த பெண்களின் பயத்தை தேவதூதர்களின் சாட்சி போக்கியது. அது மட்டுமல்ல இந்தச் சங்கதி அதாவது இந்த உண்மை எல்லாரும் அறிந்து கொள்வதற்கும் கிறிஸ்துவானவர் நம்மோடிருக்கிறார் என்று அறிந்து கொள்ளவும் உதவி செய்கிறது.

**3. அப்போஸ்தலர்களின் சாட்சி:- (அப்போஸ்தலர் 2:32)**

இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின்பு தங்களுக்கு யார் உதவிசெய்வார்கள்? தங்களுக்கு யார் இழந்த விசுவாசத்தைக் கொடுப்பார்கள்? என்று பயத்தோடு, தோல்வியோடு யூதர்களைக் கண்டும், ரோமர்களைக் கண்டும் பயந்து ஒளியக்கூடிய சூழ்நிலைக்குச் சென்றார்கள். இந்தச் சூழ்நிலையில் உயிர்த்தெழுந்த இயேசு பேதுரு, தோமா, எம்மாவுக்குச் சென்ற சீடர்கள், மகதலேனா மரியாள் மற்றும் அனைத்து சீஷர்களையும் பல மாறுபட்ட சூழ்நிலைகளில் சந்தித்தார். இந்தச் சந்திப்புகள் கிறிஸ்தவ வரலாற்றில் முக்கிய சந்திப்புகளாக அமைந்தது. இந்தச் சந்திப்புகள் சீஷர்களுடைய வாழ்வில் பெரும் மாற்றத்தை உண்டு பண்ணியது. எல்லா சீடர்களையும் ஒன்றுபடுத்தியது. இந்த சந்திப்பின் மூலமாக கிறிஸ்தவம் என்ற தனி சமூகமே உருவாகியது. பயந்து, ஒளிந்து கொண்டிருந்த சீஷர்கள் ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள். அவரை தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினார். அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம் என்று தீர்க்கமாக பல இன மக்கள் வாழ்ந்த கூட்டத்தில் தைரியமாக சீஷர்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை பிரசித்தம் பண்ணினார்கள். இந்தச் சாட்சிகள் இன்றும் ஜீவனுள்ள சாட்சிகளாக கிறிஸ்து ஜீவாதிபதியாக இருக்கிறார் என்பதை நமக்கு எடுத்துரைத்துக் கொண்டிருக்கிறது.

அன்பானவர்களே! கிறிஸ்துவின் உயிர்ப்பின் அனுபவம் இன்று நம்மில் நிறைவேற ஆண்டவர் எதிர்பார்க்கிறார். எனது வேதனைக்கு பின் வாழ்வு உண்டா? அழிவின் பாதையில் செல்லும் எனது வாழ்வுக்கு வாழ்வு உண்டா? எனது நம்பிக்கை நடைமுறைக்கு சாத்தியப்படுமா? என கேள்வி கேட்டு கொண்டிருக்கும் நம்முடைய வாழ்வில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்த சாட்சிகள் நம்மை கிறிஸ்துவுக்குள்ளாக வழிநடத்தும். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தரும் நம்பிக்கையின் அடிப்படையில் இந்த பண்டிகையை உற்சாகத்தோடு கொண்டாடி மகிழ்வோம். கிறிஸ்து என்றும் நம்மோடு இருப்பார்.

கிறிஸ்துவின் பணியில்

அருட்திரு. D.ஜோசப்

ஆயர், இராஸ் அல் கைமா.

# ஆயரம்மா மடல்

## கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் பெண்களின் அனுபவங்கள்

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகளே! மரித்து உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் ஈஸ்டர் பண்டிகை வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். திருச்சபையாக இப்பண்டிகையின் முக்கியத்துவத்தை அறிந்து, சிறப்பாக கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் இயேசுவின் காலத்தில் வாழ்ந்த பெண்களின் அனுபவங்களை அறிந்து, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அர்த்தமுள்ள பண்டிகையாகக் கொண்டாடி ஆண்டவரை மகிமைப்படுத்துவோம்.

இயேசு கிறிஸ்துவின் ஊழியத்திலும், பாடு, மரண வேளையிலும் மற்றும் அவருடைய மகிமையான உயிர்த்தெழுதலின் நேரத்திலும் பெண்கள் மிக முக்கிய இடத்தில் இருந்தார்கள். பரிசுத்த வேதாகமத்தின் மூலம் அவர்களுடைய அனுபவங்களை அறிந்துகொண்டு அதை நமது அனுபவமாக்கி உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சாட்சிகளாய் வாழ்வோம். இயேசு கிறிஸ்துவோடு இருந்த பெண்களில் மகதலேனா மரியாள், யாக்கோபின் தாயாகிய மரியாள், கூசாவின் மனைவியாகிய யோவான்னாள், சலோமி ஆகிய இவர்கள் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் முக்கியமானவர்கள்.

யூத பாரம்பரியத்தின்படி மரித்தவர்களின் உடலில் சுகந்த வர்க்கமிடும்படி நறுமணத் தைலத்தை பூசுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். சீஷர்கள் அனைவரும் யூதர்களுக்குப் பயந்ததினால், மகதலேனா மரியாளும் அவளைச் சார்ந்தவர்களும் இப்பணியை செய்வதற்காக இயேசுவானவரின் சரீரத்தை அடக்கம் பண்ணியிருந்த கல்லறையை நோக்கிச் சென்றனர். அவர்கள் கல்லறைக்குச் சமீபமானபோது மூடப்பட்டிருந்த கல்லறை திறக்கப்பட்டிருப்பதைக் கண்டு அச்சமடைந்து, பின்னர் கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்ததை அறிந்து பின்வரும் அனுபவங்களைப் பெற்றுக் கொண்டனர்.

### 1. உயிர்த்தெழுதலின் சாட்சிகளான அனுபவம்:-

இயேசுவின் உயிர்த்தெழுதலில் பெண்கள் முதன்மையான சாட்சிகளாயிருந்து உயிர்த்தெழுதலில் முக்கிய பங்காற்றினர். யூதச் சட்டத்தின்படி பெண்களின் சாட்சியம் அக்காலத்தில் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. ஆரம்ப நிலையில் மகதலேனா மரியாளும், அவளோடு இருந்தவர்களும் இயேசுவின் சரீரத்திற்கு நறுமணத்தைலம் பூசி சுகந்தவர்க்கமிடும்படி சென்றனர். அப்பொழுது கல்லறையை மூடியிருந்தக் கல் புரட்டப்பட்டிருப்பதையும், தூதன் அவர்களுக்கு இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியையும் கேட்டு, பின் கல்லறைக்குள் சென்று இயேசுவின் சரீரம் இல்லாததினால் இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதற்கு முதல் சாட்சிகளானார்கள்.

### 2. உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவை முதலில் கண்ட அனுபவம்:-

சீஷர்களும், மற்றவர்களும் இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின் யூதர்களுக்குப் பயந்து கொண்டிருந்த சூழ்நிலையில் மகதலேனா மரியாளும், அவளோடு சேர்ந்து சில பெண்களும் இயேசுவின் கல்லறைக்கு சென்றபோது உயிர்த்தெழுந்த இயேசு முதலாவது மகதலேனா மரியாளுக்குத் தரிசனமானார் (மாற்கு 16:9). இதற்குப் பின்பு இயேசுவானவர் தொடர்ந்து 40 நாட்கள் சீஷர்களுக்குத் தரிசனமாகி தன்னுடைய உயிர்த்தெழுதலை அறிவித்தார். யூத சமூகத்தில் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்பட்ட பெண்களுக்கு உயிர்த்தெழுந்த இயேசுவை முதலில் காணும் வாய்ப்பு கிடைத்தது பெண்களுக்கு கிறிஸ்து கொடுத்த அங்கீகாரமாயிருக்கிறது.

### 3. கிறிஸ்துவின் பணியை ஏற்று செய்யக்கூடிய அனுபவம்:-

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் பெண்கள் நற்செய்தியாளர்களாக, அப்போஸ்தலர்களாக கிறிஸ்துவின் பணிகளை செய்யும் அனுபவத்தை பெற்றுக்கொண்டனர். உயிர்த்தெழுந்த இயேசுவை முதலில் கண்டதும் மகதலேனா மரியாள் ரபூனி என்று கூப்பிட்டவுடன், இயேசுவானவர் தன் உயிர்த்தெழுதலை தன் சகோதரர்களாகிய சீஷர்களுக்கு தெரியப்படுத்தச் சொன்னார் (யோவான் 20:17). இயேசுவின் கட்டளைப்படி மகதலேனா மரியாள் உடனே ஓடிச் சென்று, பயத்தில் ஒளிந்து கொண்டிருந்த அப்போஸ்தலர்களிடம் சென்று நான் ஆண்டவரை கண்டேன் என்ற நற்செய்தியை அறிவித்து கிறிஸ்துவின் கட்டளையை நிறைவேற்றினாள்.

அன்பானவர்களே! உயிர்த்தெழுந்த இயேசுவை விசுவாசத்துடன் ஆராதிக்கிற நாம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் அனுபவத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த அனுபவத்தை ஜெபம், வேதவாசிப்பு, ஆலய ஆராதனைகளில் தவறாமல் பங்கெடுப்பது, கிறிஸ்தவ பக்தியிலும், ஒழுக்கத்திலும் நாம் நிலைத்து நிற்கும்போது பெற்றுக்கொள்ளலாம். இதன் மூலம் அனைவருக்கும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை பறைசாட்சி ஆண்டவருடைய அன்பில் அவர்களை வழிநடத்தும் கிருபைகளை பெற்றுக்கொள்வோம். உயிர்த்தெழுந்த கிறிஸ்துதாமே நம்மை அதற்கு நேராக வழி நடத்துவாராக.

திருமதி. P. அன்பு வனிதா ஜோசப்
ஆயரம்மா - இராஸ் அல் கைமா.

அடைக்கலமும், பெலனும், ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமாயிருந்து, கடந்த மாதம் முழுவதும் நம்மைச் சுகபத்திரமாக பாதுகாத்து வழிநடத்திய தேவாதி தேவனுக்கு முழுமனதோடு தோத்திரமும் கனமும் மகிமையும் செலுத்துகிறேன். சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். தேவன் நம் நடுவில் இருந்து, அசையாதபடிக்கு பாதுகாத்து, நம்மை கிருபையாக வழிநடத்திய செயல்களை எண்ணி நன்றியோடு துதிக்கிறேன். எல்லா சூழ்நிலைகளிலும் ஒத்தாசையின் பர்வதமாக நம்மோடிருந்து காத்த தேவனையே நம்பி ஒருமனதோடு துதிப்போம். இந்த நல்ல தேசத்துக்காக, UAE மற்றும் அரபு நாடுகளுக்காக, பாதுகாப்பிற்காக, சமாதானத்துக்காக தொடர்ந்து ஜெபிப்போம்.

ஆச்சரியமாக வழி நடத்தி வரும் கர்த்தாதி கர்த்தர் கடந்த மார்ச் மாதம் ஒவ்வொரு ஆராதனைகளும், ஊழியங்களும் சிறப்பாக நடைபெற கிருபை பாராட்டினார். வெள்ளிக்கிழமை தோறும் மாலை 7:00 மணிக்கு ஆலயத்தில் ஆராதனைகளும், சனிக்கிழமை தோறும் மாலை 7:00 மணிக்கு Jebel Ali ஆலயத்தில் ஆராதனைகளும், குறிப்பாக 21-ம் தேதி அன்று பாடல் ஆராதனையும் சிறப்பாக நடைபெற்றது. அன்று தனியாக, குழுவாக, குடும்பமாக, Prayer Cell ஆக சிறப்பு பாடல்கள் பாடி தேவனை மகிமைப்படுத்திய ஒவ்வொருவருக்கும், மேலும் 22-ம் தேதி ஞாயிறு அன்று காலை 6:45 மணி முதல் 7:00 மணி வரை ஆலயத்தில் Praise & Worship பாடல்கள் பாடி தேவனை மகிமைப் படுத்திய Sharjah - A Prayer Cell அங்கத்தினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஞாயிற்றுக் கிழமை தோறும் St. Paul's Hall-ல் காலை 7:00 மணிக்கு ஆராதனை நடைபெற்றது. மேலும் Junior Church, Cornerstone, Youth Fellowship, Womens Fellowship, Men's Fellowship, முகாம் சந்திப்பு ஊழியங்கள், Fasting Prayer, Prayer Cell ஊழியங்கள் யாவும் முறையாக நடைபெற கர்த்தர் கிருபை பாராட்டினார். யாவுக்காகவும் கர்த்தாதி கர்த்தருக்கே துதியும், கனமும், மகிமையும் செலுத்துகிறேன்.

தேவாதி தேவனுடைய அளவற்ற கிருபையால் நாம் தாங்கிவரும் 100 மிஷனெரிமார்களுக்காகவும், அவர்கள் சார்ந்துள்ள மிஷனெரி ஸ்தாபனங்களுக்காகவும், மேலும் 15 ஊழிய ஸ்தாபனங்களுக்கு பொருளாதார உதவிகள் செய்து தாங்கிவரும் ஊழியங்களுக்காகவும், பற்பல சரீர குறைபாடுள்ள சிறுவர்களுக்காக செய்துவரும் பொருளாதாரஉதவி ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து திருச்சபையாக பாரத்தோடு ஜெபிப்போம். கொளகூர் மிஷனெரி மருத்துவமனையில் உற்சாகத்தோடும், ஆத்தும பாரத்தோடும், தியாகத்தோடும் மருத்துவப்பணி செய்துவரும் Dr.Melchis மற்றும் Dr. Mrs. Daphni ஒவ்வொருவருக்காகவும் ஒவ்வொருநாளும் பாரத்தோடு ஜெபிப்போம். சிகிச்சை பெற கடந்துவரும் மக்கள் சரீர நலனுக்காகவும், இரட்சிப்புக்காகவும் ஜெபிப்ோம்.

Place of Worship Licence மற்றும் Bank A/c open செய்யும் காரியமாகவும் எடுக்கப்படும் முயற்சிகளுக்காகவும் விரைவில் காரியங்கள் கைகூடி வரவும் கர்த்தர்தாமே அனுக்ரகம் செய்ய கிருபை செய்வாராக. சர்வ வல்லமையுள்ள தேவனாலே எல்லாம் ஆகும். விசுவாசத்தோடும் ஸ்தோத்திரத்தோடும் தினமும் ஜெபிப்போம்.

எதிர்பாராத சூழ்நிலையில் நடைபெற இருந்த பெண்கள் ஐக்கிய சங்க Retreat, சிறுவர் VBS Programme யாவும் நடைபெற இயலாமல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கூடிய விரைவில் இந்த ஊழியங்கள் நடைபெறவும், மற்றும் April மாதம் நடக்க இருக்கும் எல்லா ஆராதனைகளுக்காகவும், மற்ற எல்லா ஊழியங்களுக்காகவும் ஜெபிப்போம். தேவன்தாமே நம் அனைவரையும் தொடர்ந்து பாதுகாத்து நடத்துவாராக.

**Praise be to God Almighty.**

Moses Vijaya Kumar,
Secretary.

## NEW MEMBERS

| No | Name | Mem. No. | Area |
|---|---|---|---|
| 1 | Mr. Andrew Isaac Raj G | 3193 | Dubai |
| 2 | Miss Jennifer Sharon Nikitha | 3194 | Dubai |
| 3 | Miss Nitya Balan | 3195 | Dubai |
| 4 | Mr. Sajin Anand S | 3196 | Dubai |
| 5 | Mr. Gethish J Oliver | 3197 | Dubai |

# நீங்கள் கிறிஸ்தவரா...

"நீயோ தர்மஞ்செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது."
மத்தேயு 6:3

எமது ஜெபமோ
அகத்திலிருந்தே...
ஆதிஅந்தமானோனே...
இயேசு கிறிஸ்துவே
ஈந்தளித்த வாழ்விலே
உம் சித்தமே...
ஊடுருவி பூமியிலே...
எங்கள் ஆகாரம்தாருமே
ஏவல் மன்னிப்பதே!
ஐயம் தீர்கணமே!
ஒருவரும் தீமையின்றியே
ஓங்கு புகழென நீரே
ஔஷத இராஜ்யத்திலே
∴என மகிமையாவீரே!!
ஆமென்... ஆமென்...
மத்தேயு 6:9-13
அனுதின ஜெபத்திலே
உள்ளத் தூய்மையிலே!
ஆவியில் நிரம்புதலே
ஆத்மா இரட்சிப்பாகுமே!
உணவு கட்டுபாட்டிலே
உடல் நலம் பெறுமே!
நலம் நாடுவதால்
அல்லல் அற்ற...
வாழ்வு வருமே!
பிறர் நலம்பேணுதலால்
அன்பு வளருமே!
புனித வேதாகமே
புனைந்தே வாசித்து
நேசித்து நெஞ்சிலே
நிலைநிறுத்தியே

ஒருவரை ஒருவர்
நேசிப்போமே!!!
இதில் தானே
சாந்தியும்
சமாதானமும்
நற்குணமும்
தோன்றும் தானே!
அன்பானோரே!
கிறிஸ்துவின்
சிறந்த போதனை
யாதெனில்...
தானமும்
தர்மமும்
வலது இடதுகை
அறியாது
அந்தரங்கமாவதுமே!
மத்தேயு 6:3
ஈகையும்
இரக்கமும்
உடையோர் எவரோ
அவரே...
பேரின்பம் அடைவர்.
வெளியரங்க
பலன் பெற
நமது ஜெபமோ
அறை வீட்டுக்குள்ளே
கதவுகளை பூட்டி
அந்தரங்கமாக
அடக்கமாக...
அலம்பாமல்

அவர் பாதம்
தாழ விழுந்து
பணிதலே...
அழகு... அன்பு
ஆனந்தமாம்.
அன்பானோரே!
ஜெபமோ...
தவமோ...
உபவாசமோ...
உதவும் குணமோ...
தீதில்லா நெஞ்சமோ...
இதயத்துள்
பசுமரத்தாணிபோல்
பதிந்தாலே...
இயேசு கிறிஸ்துவின்
அபிமான அன்பர்களாய்
இவ் மானிட
பிறவியின்
மகத்தான
கடமைகளை
செய்வோம்...
மனைவி, மக்கள்
தாய்... தந்தை
எல்லோரிடமும்
எந்நிலை வரினும்
எப்போதும்
மாசற்ற
இயேசுவிடம்
இணைந்தே
மன்றாடுவோம்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# திருச்சபை ஜெபநாள் 05-04-2026 (முதல் ஞாயிறு)

"அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." மத்தேயு 18:19

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும் சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும் மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் அருளிய கிருபைகளுக்காக துதிப்போம்.
- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலன், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- நம் பணிகள், தொழில்கள் மற்றும் பிரயாணங்களில் ஆண்டவர் அருளிய பாதுகாப்பிற்காக துதிப்போம்.
- மார்ச் மாதம் அனைத்து ஆராதனைகளும் ஆசீர்வாதமாக அமைந்ததற்காக துதிப்போம்.
- கடந்த நாட்களில் யுத்த சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் ஆண்டவர் தந்த பாதுகாப்புக்காக துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், மற்றும் அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்
- ஃபுஜைரா, இராஸ் அல் கைமா சபைகளின் ஊழியங்களுக்காக, சபை வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.
